## ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில்

# இருசக்கர மின்வாகன வாடகை வசதி தொடக்கம்

■ சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து பயணிகள் விரும்பும் இடங்களுக்கு சென்றுவர வசதியாக மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்கள் வாடகைக்கு கிடைக்கும் வசதி ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று தொடங்கப்பட்டுள்ளது.

ஓட்டுநர் உரிமம் மற்றும் செல்ஃபி புகைப்படத்தை ஆன்லைனில் பதிவு செய்து இந்த இருசக்கர வாகனத்தை பெற்றுக்கொள்ளலாம். நிமிடத்துக்கு ரூ.1 என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தினமும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இந்த வசதி கிடைக்கும். தற்போது 6 இருசக்கர வாகனங்கள் உள்ளன. பயணிகளின் வரவேற்பைப் பொறுத்து வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது.